மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஐம்பத்தைந்து வயது.

(இ) யோசனைகள் வந்துள்ளன. அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, பள்ளி மேற்பார்வையாளர்களாக, ஆசிரியர்களாக இருந்து அந்தப் பதவிக்கு வருவதால், ஆசிரியர்களுக்குள்ள வயதை அவர்களுக்கு நிர்ணயம் செய்ய இந்த சர்க்கார் முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையில் உள்ள பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களுக்கு வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற நிர்வாகத் துறையில் அரசிதழ் பதிவு செய்தவர்களுக்கு 58-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பதிவு பெறாதவர்கள் வயதை உயர்த்துவதுபற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை காரணமாக ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் ஸ்கூல்ஸ் இன்றைக்கு எவ்வளவு பேர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய தகவல் இப்பொழுது இல்லை.

Safety Belts

* 329 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to order the wearing of "Safety belts" for all the automobile drivers, which will secure the drivers fixed to the seats while driving ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. விநாயகம்: ஸார், இந்த சேஃப்டி பெல்ட் மோட்டார் வண்டிகளை ஓட்டுகிற டிரைவர்களுக்கு மாத்திரம் என்று அல்ல; மோட்டார் சைக்கிளில் போகிறவர்களுக்கும், ஸ்கூட்டர்களில் போகிறவர்களுக்கும் இது பயன்படும் என்று கருதப்படுகிறது. அவர்களையாயினும் நிர்ப்பந்தப்படுத்தி அதைப் போட்டுக்கொண்டுதான் ஓட்ட வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் "பை நெகோஷியேடிங் எ பெண்ட்"—அதாவது ஒரு இடத்தில் திரும்பும்போது—அவர்களுடைய இடத்திலிருந்து நழுவிக் கீழே விழுகிறார்கள். அப்போது பக்கத்தில் இருக்கிற மங்கையும் கீழே விழும் நிலைமை இருக்கிறது. அப்படி இல்லாமல் இரண்டு பேர்களையும் சீட்டோடு கட்டிப்போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைப் போடுவதன்மூலம் ஒரு அருமையான காட்சியைக் காணத் தவறி விடுவார். அதற்கு இப்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

தூறு எடுக்கும் கருவிகள்

* 330 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூறு எடுக்கும் கருவிகள் வடார்க்காடு மாவட்டத்திற்கு எப்போது கொண்டு வரப்படும் ?